# முகவுரை

உயர்நிலை 2 மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி நூல் என்னும் புத்தகம், மாணவர்களுக்கு எளிய முறையில் வாய்மொழி தேர்வினைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு உதவ வேண்டும் எனும் நோக்கத்தில் சிகரத்தால் வெளியிடப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிகளுக்கான (MOE) தமிழ்மொழிப் பாடத்திட்டத்தைத் தழுவி இந்தப் புத்தகம் அமைந்துள்ளது.

இந்தப் புத்தகத்தில் வாய்மொழித் தேர்வுக்கான **15** முக்கியத் தலைப்புகள் தொடர்பான சொல்வளங்கள் இடம்பெற்றுள்ளது. சிறப்பான முறையில் பதிலளிக்க தேவையான வழிகாட்டல்கள் எளிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. தலைப்புகள் ஒட்டிய கூடுதல் தகவல்களும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. அனைத்து நிலை மாணவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் சில சொல்வளங்கள் ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி நூல் என்ற புத்தகத்தின் வாயிலாகத், தேர்வை எதிர்நோக்கும் உயர்நிலை மாணவர்கள் முக்கியத் தலைப்புகளைக் கொண்டு உத்திகளின் வழி மாதிரி வினாக்களுக்கு உகந்த பதிலளிக்கும் திறனை மேம்படுத்திக் கொள்ளலாம். இப்புத்தகத்தைப் பயன்படுத்தி சிறந்த மதிப்பெண்களைப் பெறுவதற்கு வேர்ட்ஸ்மித் சிகரம் வாழ்த்துகிறது!

நன்றி

பதிப்பாளர் குழு

வேர்ட்ஸ்மித் சிகரம் கல்வி நிறுவனம்

**SEC 2 - HOW TO GET FULL SCORE IN ORAL EXAM - REVISION GUIDE**
**உயர்நிலை 2 வாய்மொழித் தேர்வு சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி நூல்**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | இணையப் பாதுகாப்பின் அவசியம் (Importance of Cyber Security) | 1 - 6 |
| 2 | தமிழ் மொழி விழா (Tamil Language Festival) | 7 - 12 |
| 3 | இயந்திர வாழ்க்கை முறை (Mechanical Lifestyle) | 13 - 18 |
| 4 | விடுமுறையைக் களிக்க வெளியூர் பயணம் (Holiday Vacation Experience) | 19 - 24 |
| 5 | குடிமக்களுக்கான அரசாங்கச் சலுகைகள் (Governments Concession for Citizens) | 25 - 30 |
| 6 | மாணவர்களும் நன்கொடை பண்புகளும் (Students and Donating Values) | 31 - 36 |
| 7 | பொழுதுபோக்கு நடவடிக்கைகள் (Hobbies) | 37 - 42 |
| 8 | உணவை வீணாக்குதல் (Food Wastage) | 43 - 48 |
| 9 | லிட்டில் இந்தியாவின் சிறப்புகள் (Specialities of Little India) | 49 - 54 |
| 10 | தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் (Television Shows) | 55 - 60 |
| 11 | நல்ல நட்பின் அவசியம் (Importance of Good Friendship) | 61 - 66 |
| 12 | வாசிப்புப் பழக்கம் (Reading Habit) | 67 - 72 |
| 13 | பிற மொழி கற்பதன் அவசியம் (Importance of Learning Other Language) | 73 - 78 |
| 14 | சிங்கப்பூரின் கல்விமுறை (Education System of Singapore) | 79 - 84 |
| 15 | வெளியூர் பயணங்களும் சிக்கல்களும் (Outstation Journeys and Problems) | 85 - 90 |
| | விடைத்தாள்கள் | 91 - 95 |

## 2. தமிழ் மொழி விழா (Tamil Language Festival)

**சொல்வளம்**

| | | |
|---|---|---|
| 1. | நிகழ்ச்சிகள் | Programmes |
| 2. | ஈடுபாடு | Involvement |
| 3. | சொற்போர் | Debate |
| 4. | போட்டி விளையாட்டு | Competition |
| 5. | இயக்கங்கள் | Associations |
| 6. | பழக்க வழக்கம் | Habit |
| 7. | பண்பாடு | Culture |
| 8. | நாகரிகம் | Civilization |
| 9. | தனிப்பண்பு | Unique Character |
| 10. | சுயத்திறமை | Self-Talent |
| 11. | மேடை நாடகம் | Stage Drama |
| 12. | மொழி வளம் | Language Resource |
| 13. | இன ஒற்றுமை | Racial Unity |
| 14. | ஆதரவு | Support |
| 15. | பங்கேற்பாளர் | Participant |






**காணொளி சூழல்**

தமிழ் மொழி விழா - ஆரம்பம் - பள்ளியைப் பிரதிநிதித்து (Representing) - சொற்போர் - பங்கு பெறுதல் - குழுவின் பெயர் - 'சிங்கைத் தமிழர்' - முதல் சுற்று - தலைப்பு - ஒட்டி / வெட்டி (Constructive / Rebuttal) பேசுதல் - வெற்றி பெறுதல் - அடுத்த சுற்றுகள் - துடிப்பான பேச்சு - தெளிவான கருத்து - தொனி (Tone) - நடை (Style), பாவனை (Action) - கலைச்சொற்கள் (Vocabulary) - கைத்தட்டல் - அனைவரையும் கவர்தல் - இறுதிச் சுற்று - போட்டித்தன்மை (Competitive) - திறமையான குழு - மன உறுதி - தைரியமாக பேசுதல் - நகைச்சுவை உத்தி - அரங்கத்தில் சிரிப்பொலி (Laughter) - சொற்போர் முடிவுறுதல் - பரிசளிப்பு விழா - பதட்டம் - வாகை (Victory) சூடுதல் - நீதிபதி - பாராட்டு - மகிழ்ச்சி - மறக்க முடியாத நாள் - பள்ளியில் கௌரவிப்பு (Honoured) - தலைமையாசிரியர் பாராட்டு

**வினாக்களுக்கு விடையளிக்கும் உத்தி**

**1. காணொளி வடிவத்தின் வாயிலாக தமிழ் மொழி விழாவில் கலந்து கொண்ட அனுபவம் பற்றி உன் கருத்தைக் கூறுக.**

| | |
|---|---|
| **EVIDENCES / EXPLANATIONS / ஆதாரங்கள் / விளக்கங்கள்** | • தமிழ் மொழி விழாவில் பள்ளியைப் பிரதிநிதித்து சொற்போர் போட்டியில் கலந்து கொண்டேன்.<br>• தொனி, நடை, பாவனையுடன் பேசி அனைவரையும் கவர்ந்தேன்.<br>• ஒரு தலைப்பைப் பற்றி ஒட்டி / வெட்டி வாதாடினேன் (Argue).<br>• போட்டியில் வெற்றிப் பெற்றதால் அனைவரும் 1. ______________________. |
| **CONSEQUENCES / விளைவுகள்** | • நிறைய கலைச்சொற்களை அறியலாம்.<br>• எதிராளியைக் (Opponent) கண்டு பயப்படாமல் தைரியமாக 2. _____________________.<br>• எங்கு, எப்படி பேச வேண்டும் என்ற நுணுக்கத்தைக் (Techniques) கற்றுக் கொள்ளலாம்.<br>• மேடையில் பேசும்போது ஏற்படும் பயத்தைத் தவிர்க்கலாம். |

| | |
|---|---|
| **SOLUTIONS / தீர்வுகள்** | • மாணவர்களிடையே தமிழ்ப்பற்றை (Love Tamil Language) அதிகரிக்க பள்ளிக்கூடங்களில் தமிழ் சார்ந்த நடவடிக்கைகளை 3. __________________ செய்ய வேண்டும்.<br>• பெற்றோர்கள் தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்லலாம். |

**2. பள்ளிகளில் மாணவர்கள் தமிழ் மொழி பாடத்தை ஆர்வமுடன் கற்க என்ன செய்யலாம் என்று நீ நினைக்கிறாய்?**

| | |
|---|---|
| **EVIDENCES / EXPLANATIONS / ஆதாரங்கள் / விளக்கங்கள்** | • விளையாட்டு முறையைப் பயன்படுத்தி தமிழ் மொழியைப் போதிக்கலாம்.<br>• செய்யுள், பழமொழி, திருக்குறள், கதைகள் போன்றவற்றை எடுத்துக்காட்டுக் காட்சிகளோடு சொல்லி 4. _____________________.<br>• தொழில் நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தலாம்.<br>• பாடல், நகைச்சுவை, புதிர் போன்ற அம்சங்களைப் (Features) புகுத்தலாம் (Insert). |
| **CONSEQUENCES / விளைவுகள்** | • மாணவர்களுக்குச் சலிப்புத்தன்மை (Boredom) ஏற்படாது.<br>• மகிழ்ச்சியான கற்றல் கற்பித்தல் சூழல் ஏற்படும்.<br>• தமிழ் மொழி பாடத்தில் மாணவர்களின் ஈடுபாடு (Involvement) 5. _____________________. |
| **SOLUTIONS / தீர்வுகள்** | • ஆசிரியர்கள் காலத்திற்கேற்றவாறு தொழில்நுட்பக் கருவிகள், விளையாட்டுகள் போன்ற துணைப் பொருட்களைப் (Supporting Materials) பயன்படுத்த வேண்டும்.<br>• மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படும் வகையிலான உத்திகளைப் (Techniques) பயன்படுத்துவது சிறப்பு.<br>• மாணவர்களை ஈடுபடுத்தும் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் 6. __________________________ வேண்டும். |

**3. இன்றைய பதின்ம வயதினர் தமிழில் பேச ஆர்வம் காட்டுவதில்லை என்பதை நீ ஒப்புக் கொள்கிறாயா?**

| **பதில் : ஓரளவு ஒப்புக் கொள்ள முடியும்.** | |
|---|---|
| **EVIDENCES / EXPLANATIONS / ஆதாரங்கள் / விளக்கங்கள்** | • பல்லின மக்கள் வாழும் நாடாக இருப்பதால் அதிகமாக ஆங்கிலத்தில் உரையாடும் சூழல் ஏற்படுகிறது.<br>• வீட்டில் குடும்ப உறுப்பினர்களிடம் பெருமளவு ஆங்கிலத்தில் 7. ____________________ வழக்கம் ஏற்பட்டுள்ளது.<br>• தாய்மொழி வகுப்பு நேரத்தில் மட்டுமே தமிழ் மொழியில் உரையாடுகிறார்கள்.<br>• இருப்பினும், தமிழ் மொழியை விட்டுக் கொடுப்பதில்லை. |
| **CONSEQUENCES / விளைவுகள்** | • தொன்மையான (Oldest) தமிழ் மொழியின் அருமை பெருமைகளை அறியாமல் போகக் கூடும்.<br>• பதின்ம வயதினர் தமிழில் உரையாட கூச்சப்படுவார்கள் (Shy).<br>• அடுத்த தலைமுறை தமிழ் மொழியைக் கற்காமல் போகலாம்.<br>• மொழி கலப்பு (Mixed Languages) ஏற்படுதல் - பல மொழிகளை 8. ____________________ பேசுவதால் தமிழ் மொழியின் தனித்தன்மை (Uniqueness) கெடும். |
| **SOLUTIONS / தீர்வுகள்** | • 9. ______________________ முடிந்தளவு தமிழில் பேசுவதைப் பெற்றோர்கள் ஆதரிக்க (Encourage) வேண்டும்.<br>• சக இனத்தவரோடு தமிழில் உரையாடும் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்.<br>• நமது தாய்மொழியான தமிழ் மொழியைப் பேச 10. ____________________ இருப்பது அவமானம் என்பதை உணர வேண்டும். |

**தமிழ் மொழி விழா சார்ந்த தகவல்கள்**

- வளர்தமிழ் இயக்கம் (Tamil Language Council)
- சிங்கைத் தமிழ்ச் சங்கம் (Singai Tamil Sangam)
- சிங்கப்பூர் இந்தியர் சங்கம் (Singapore Indian Association)
- சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை
  (Tamil Language Society, National University of Singapore)
- கலாச்சார, சமூக, இளையர்துறை அமைச்சு
  (Ministry for Culture, Community and Youth)

<u>**மாணவர் குறிப்பு**</u> :

**கீழ்காணும் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக**

1. நிகழ்ச்சிகள் - ஈடுபாடு

______________________________________________

______________________________________________

2. மொழி வளம் - சொற்போர்

______________________________________________

______________________________________________

3. சுயத்திறமை - மேடை நாடகம்

______________________________________________

______________________________________________

4. ஆதரவு - பங்கேற்பாளர்

______________________________________________

______________________________________________

5. இயக்கங்கள் - இன ஒற்றுமை

______________________________________________

______________________________________________

# விடைத்தாள்

## 1. இணையப் பாதுகாப்பின் அவசியம்

| | |
|---|---|
| 1. உதவும் | 6. ஏமாறுவது |
| 2. தாக்குவதால் | 7. ஆபத்துகளை |
| 3. பாதுகாப்பாக | 8. புகார் |
| 4. இழப்பு | 9. போதிக்க |
| 5. குறையும் | 10.செயல்களில் |

## 2. தமிழ் மொழி விழா

| | |
|---|---|
| 1. பாராட்டினர் | 6. வழங்க |
| 2. பேசலாம் | 7. உரையாடும் |
| 3. ஏற்பாடு | 8. கலந்து |
| 4. கொடுக்கலாம் | 9. வீட்டில் |
| 5. அதிகரிக்கும் | 10. தெரியாமல் |

## 3. இயந்திர வாழ்க்கை முறை

| | |
|---|---|
| 1. மகிழ்ச்சியாக | 6. அவசியத்தை |
| 2. குறைகிறது | 7. கைப்பேசி |
| 3. மீறுதல் | 8. கலந்து |
| 4. தவிர்ப்பர் | 9. பிணைப்பின் |
| 5. தொழில்நுட்ப | 10. வளரும் |